**தலைப்பு 154 – கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 கணக்காய்வு அபிப்பிராயம்

கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சிசிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது.இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் *அமைச்சினால்* வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் *அமைச்சின்* நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாகக் கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

- எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டு பிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 வேறு சட்டத் தேவைப்பாடுகள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) ஆம் பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக் கூற்று தொடர்பாக கருத்துத் தெரிவித்தல்

### 1.6.1 நிதிச் செயலாற்றுகை கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற் கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | **பரிந்துரை** | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| (அ) | 2018 டிஸம்பர் 31 ம் திகதியுடன் நிறைவுரும் வருடத்திற்கு தயார்படுத்திய நிதிக்கூற்றறிக்கையில் வருமானம் பெறா கிடைப்பனவுகள் ரூபா 6,848,028 குறைவாகவும் ரூபா 5,777,530 அதிகமாகவும் காட்டப்பட்டிருப்பதன் காரணமாக வருமாணத்தின் நிகரக் குறைவு ரூபா 1,070,498 **ஆனது.** | **2018** நவம்பர் **21**ம் திகதியுடைய **267/2018** ஆம் இலக்க அரச பொதுக் கணக்குச் சுற்றறிக்கையின் படி நிதிக்கூற்றுக்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டி வரல். | பொதுகணக்கு சுற்றறிக்கை 267/2018 **ஆம் இலக்கத்தின்** படிநிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன, இது தொடர்பாக எந்தபயிற்சியும் வழிகாட்டலும் வழங்கப்படாததால் கணக்குகள் அமைச்சினால் சேகரித்த வருமாணத்தையும் செலவுகளையும் தனித்தனியாக தயாரித்து, பொதுச் சுற்றறிக்கை கணக்கியல் தர நிலை எண் 02 ற்கு இணங்கதனித்தனியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | **2018 டிஸம்பர் 31 ம் திகதியுடன் நிறைவுரும் வருடத்திற்கு தயார்படுத்திய நிதிக் கூற்றறிக்கையில் முன் கூட்டிய கட்டன கொடுப்பனவில் ரூபா**2,031,563 குறைவாகவும், அரச | 2018 நவம்பர் 21ம் திகதியுடைய 267/2018 ஆம் இலக்க அரச பொதுக் கணக்குச் சுற்றறிக்கையின் படி நிதிக்கூற்றுக்கள் | பொதுகணக்கு சுற்றறிக்கை 267/2018 **ஆம் இலக்கத்தின்** படி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன, இது தொடர்பாக எந்த பயிற்சியும் வழிகாட்டலும் வழங்கப்படாததால் கணக்குகள் அமைச்சினால் சேகரித்த |

| | | | |
|---|---|---|---|
| | வருமானத்தில் ரூபா.1,519,987 அதிகமாகவும் **காட்டப்பட்டிருப்பதன் காரணமாக** செலவுகள்ரூபா.511,576 ஆக குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | ஒழுங்குபடுத்தப்பட வேண்டி வரல். | வருமாணத்தையும் செலவுகளையும் தனித்தனியாக தயாரித்து, பொதுச் சுற்றறிக்கைகணக்கியல் தர நிலை எண் 02 ற்கு இணங்க தனித்தனியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. |
| (இ) | 2018 **டிஸம்பர் 31 ம் திகதியுடன் நிறைவுரும் வருடத்திற்கான சரியான மொத்தத் தொகை** ரூ.**2,652,258,207** ஆக இருந்திருக்க வேண்டிய நிலையில் நிதிக்கூற்றறிக்கையில் மொத்த தொகை ரூ.2,652,817,128 இருப்பதனால் ரூ.558,921 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2018 நவம்பர் 21ம் திகதியுடைய 267/2018 ஆம் இலக்க அரச பொதுக் கணக்குச் சுற்றறிக்கையின் படி நிதிக்கூற்றுக்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டி வரல். | பொதுகணக்கு சுற்றறிக்கை 267/2018 **ஆம் இலக்கத்தின்** படிநிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன, இது தொடர்பாக எந்த பயிற்சியும் வழிகாட்டலும் வழங்கப்படாததால் கணக்குகள் அமைச்சினால் சேகரித்த வருமாணத்தையும் செலவுகளையும் தனித்தனியாகதயாரித்து, பொதுச் சுற்றறிக்கைகணக்கியல் தரநிலை எண் 02 ற்கு இணங்கதனித்தனியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2018 ம் ஆண்டு டிஸம்பர் 31 ம் திகதிக்கு இறுதி நிழுவையானது நிதி ஒழுங்கு விதி 208 மூலம் பெறப்பட்ட **909,880** ரூபா நிதி ஒதுக்கீடானது குறைவாகவும் மாதாந்த கணக்குச் சுருக்கம் மற்றும் திறைசேரி அச்சகக் குறிப்புகளுக்கமைய ஒப்பு நோக்கிய பின் முற்பணக் கணக்கின் கிடைப்பனவுகள் மற்றும் செலவுகளின் வித்தியாசம் ஒழுங்குமுறைப்படிரூ.4,690,268 உம் | **2018 நவம்பர் 21 ம்திகதியுடைய** 267/2018 **ஆம்இலக்கஅரசபொதுக் கணக்குச்சுற்றறிக்கையின் 3.1 இன் படி நிதிக்கூற்றுக்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டிவரல்.** | பொதுகணக்கு சுற்றறிக்கை 267/2018 **ஆம் இலக்கத்தின்** படிநிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன, இது தொடர்பாகஎந்த பயிற்சியும் வழிகாட்டலும் வழங்கப்படாததால்கணக்குகள்அ மைச்சினால் சேகரித்த வருமாணத்தையும் செலவுகளையும் தனித்தனியாக தயாரித்து, பொதுச் சுற்றறிக்கை கணக்கியல் தர நிலை எண் 02 ற்கு இணங்கதனித்தனியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. |

### **1.6.2** நிதி நிலைமை பற்றிய கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற் கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | **பரிந்துரை** | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| 2017 **டிஸம்பர் 31 ம் திகதிக்குநடப்பற்ற சொத்துக்களின் மதிப்பு** 633,057,435 **ரூபாவெனினும் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளுக்கேற்ப ஆரம்பத் தொகை** 1,564,496,082 **ரூபாவாக காட்டப்பட்டதன் காரணமாக** 930,438,647 **ரூபா அதிகமாக நிதிக்கூற்றறிக்கையில் காட்டப்பட்டிருந்தது.** | 2017 டிஸம்பர் 31 ம் திகதியின் மொத்த நிழுவையானது, 2018 **ஜனவரி1 ம் திதியின்** ஆரம்ப நிலுவைத் தொகையாக கருதப்பட வேண்டும் | அமைச்சானது இதற்கு முன்னர் இருந்த 3 அமைச்சுகளுடன் ஒன்றித்து இருந்தமையால் 2017 ம் ஆண்டின் சொத்துக்களை அறிந்து கொள்வதில் சிக்கல் உள்ளது. 2018 ம் ஆண்டில் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டதால் சொத்துக்களின் மதிப்பு அதிகரித்தது |

### **1.6.3 <u>கணக்காய்வுச் சான்றுகள் இல்லாமை</u>**

பின்வரும் அவதானிப்புகள் மேற் கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | **பரிந்துரை** | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| (அ) | கே.ஜே 3853 என்ற எண்ணைத் தாங்கிய வாகனம் 2018 செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் விபத்தில் சிக்கியது. இது தொடர்பாக, பழுது பார்ப்புகளின் மதிப்பு மற்றும் ரூ .22,600 இன் காப்பீட்டு உரிமைகோரல்களை நிறுவுவதற்கான எந்த ஆதாரமும் | **இழப்புக்கு காரணமான** தரப்பினர் **அடையாளம் காணப்பட்டு, இழப்பை மீட்டெடுத்தவுடன்** நிதிப் பிரமாணம். 109 க்கு **கு அமைய நிதிக்கூற்றில் புத்தகங்களில்இருந்துஅ கற்றுவதுசம்பந்தமானஅ** | 2018 **அக்டோபர் 10, அன்று, விபத்துகுறித்துவாகன ஓட்டுநர்கோஹுவாலாகாவல் நிலையத்தில் புகார்செய்து** ஓட்டுநர் வெளியிட்ட அறிக்கையின் நகலும், விபத்து குறித்த போலீஸ் அறிக்கையும் அக்டோபர் 12, 2018 அன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தும், அந்த ஆவணங்கள் |

| | | |
|---|---|---|
| இல்லை. மேலும் நிதிக்கூற்றுக்களில் புத்தகங்களில் இருந்து அகற்றுவது சம்பந்தமான அறிவித்தலின் மொத்த நட்டமானது 101,650 ரூபா இருந்தும் நிதி ஒழுங்கு விதிக்கமைய தயாரிக்க வேண்டிய இறுதி அறிக்கை கணக்காய்வுக்கு முன் வைத்திருக்கவில்லை. | **றிவித்தலை ஒழுங்குபடுத்த வேண்டும்.** | வெளியிடப்படவில்லை.தொடர்புடைய ஆவணங்களை பெற்று விசாரணையை விரைவாக நிறைவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) 2018 மார்ச்**இல், சேதமடைந்த** CAA - 0024 **இலக்கத்தைஉடையவாகனத்தைப முதுபார்க்கும்செலவு** 105,153 **ரூபாமற்றும்** 277,321 **ரூபா, மொத்தமாக** 382,474 **ரூபாவாகஇருந்தது.ஆனால்அந்த தொகைகேரேஜுக்குசெலுத்தப்பட் டதைஉறுதிப்படுத்த** கணக்காய்வு **சமர்ப்பிக்கப்படவில்லை.**. | பொது நிதி தொடர்பான அனைத்து ஆவணங்களும் கோப்புகளும் புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும் | |

1.6.4 அரச அதிகாரிகளுக்கான முற்பணக் கொடுப்பனவுளின் ஒப்பீட்டறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | **பரிந்துரை** | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| **மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதித்திகதி ஆகும் வேளையில்** 2002, 2015 **மற்றும்** 2017 **ஆம்ஆண்டுகளில் சேவையைவிட்டு வெளியேறிய மூன்றுஅதிகாரிகளிடமிருந்து மீளப்பெறவேண்டிய தொகையாகிய** 244,924 **ரூபாவை மீளப்பெற்றிருக்கவில்லை** | **தாபனவிதிக்கோவையின்** xxiv **பத்தி** 4.5 **ற்கு அமைய கடனை மீட்டெடுப்பதற்கானமுறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்** | கடன் தொகையை திரும்ப பெறுவதற்கான பணிகள் நடைபெற்றுவறுகின்றன |

பின்வரும் அவதானிப்புகள் மேற் கொள்ளப்படுகின்றன.

---

### 1.6.5 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லாமை

அமைச்சினால் பின்வரும் ஆவணங்கள் பேணப்படாத அதே வேளை சில ஆவணங்கள் காலத்துக்கேற்ப புதுப்பிக்கப்படவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப்பதிவேடு நாளது வரை பேணப்பட வேண்டும் | 1978 டிஸம்பர் 19 திகதியுடையஇலக்கம் 840 இன் திறைசேரி சுற்றறிக்கை/நிதிஒழுங்கு விதிக்கேற்ப அதன் 11 வது பின்இணைப்புக்கு பொருந்தும் படி நிலையான சொத்து பதிவேட்டை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கப்படவேண்டும | திறைசேரிசுற்றறிக்கை இலக்கம் 840 ற்கு ஏற்ப நிலையான சொத்து பதிவறிக்கை தயார்படுத்தப்பட்டுள்ளதோடு முன்னைய அமைச்சுக்களால் வழங்கியவாகனங்கள் தொடர்பானபுத்தகங்கள் மற்றும் விவரங்கள் முறையாககிடைக்கப்பெறாமையால் முழுவிவரங்களையும் உள்ளடக்கமுடியாமல்உள்ளது.இந்தஅமைச்சுக்குவாங்கப்பட்டநகல்கள் இயந்திரங்களின்விவரங்கள்மற்றும் இயந்திரபக்கங்களில்பட்டியலிடப்பட்டுள்ளன. |
| (ஆ) | <u>பிணை ஆவணம்</u> அமைச்சினூடாகபின்வரும் ஆவணங்கள்பராமரிக்கப்படாத அதே வேளை புதுப்பித்தும் வைக்கப்படவில்லை. | நிதி ஒழுங்கு விதி 891 (1) இல்குறிப்பிடப்பட்டுள்ளதகவல்கள்உள்ளடங்கும் விதமாகபினைவைக்க வேண்டிய அதிகாரிகள்சார்பாகபினைஆவனமொன்றைநடாத்திச்செல்லவேண்டும். | நிதிஒழுங்குவிதி 891 (1) ற்குஏற்பபினைஆவனமொன்றுதயார்படுத்தப்பட்டுள்ளது. பினைவைத்தஅதிகாரிகளின்தகவல்களை உள்ளடக்கிபினைவைக்கஇருக்கின்றஏனையஅதிகாரிகள்பினைவைப்பதற்கானஉரியநடவடிக்கைகள்மேற்கொள்ளப்படுகின்றன. |
| (இ) | சேதங்கள்பற்றிய ஆவண நாளது வரை பேணப்பட வில்லை. | நிதி ஒழுங்கு விதி 110 இன்விதிகளின்படிசேதங்கள்பற்றியபதிவொன்றைநடாத்திச்செல்ல வேண்டும் | சேதங்கள் பற்றிய பட்டியல் நிதி விதிமுறைகள் 110 இன் படி தயாரிக்கப்பட்டுள்ளதோடு பதிவாகியுள்ள வாகணங்களின் சேதங்களும் அதற்கு உள்ளடக்கப்பட்டுள்ளன. விலங்குகளை |

| | | | |
|---|---|---|---|
| | | | இறக்குமதி செய்வதாலும், அரசாங்கத்திற்கு ஏற்பட்ட பிற சேதங்களாலும் அரசாங்கத்தின் எந்த இழப்பும் பதிவு செய்யப்படில்லை |
| (ஈ) | முற்பணக்கணக்குஆவனம் அதிகாரிகளின்முற்பணக்கணக்குவழங்குவதில், பணம்பெற்றுக்கொண்டஅதிகாரியின்பதவி, உத்திரவாதமளிஎண்மற்றும் முற்பணக்கணக்குதீர்க்கப்படும்போதுஉத்திரவாதமளிஎண்ணும்முற்பணக்கணக்கறிக்கையில்குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | நிதிஒழுங்குவிதி 488 (3) ற்குஏற்பமுற்பணக்கணக்குஆவனம்புதுப்பித்துபராமரித்துச்செல்ல வேண்டும். | முற்பணக் கணக்கு பெற்றுக் கொள்வதற்கு முன்வைத்துள்ள உத்திரவாதமளிகளுக்கு  ஏற்ப அதிகாரிகளின் பதவிகள் போன்ற தகவல்கள் முற்பணக் கணக்கு அறிக்கைக்கு உள்ளடக்குவதற்கு  பொறுப்பதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.பணம் பெற்றுக் கொள்ளும் நேரத்தில் பொது 35 உத்திரவாதமளியில் கையொப்பமிடப்படும். உத்திரவாதமளி எண் பணப் புத்தகம் மற்றும் உத்திரவாதமளியில் குறிப்பிடப்பட்டுள்ளது. |

## 1.6.6 விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்கிச் செல்லாமை

கணக்காய்வின்போது தென்பட்டவிதிகள் மற்றும் விதி முறைகளுக்கு இணங்காத நிகழ்வுகள் பின்வருமாறு.

| | கணக்காய்வுகண்காணிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|---|
| | விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு அமைய | விதிமுறைகளுக்குட்படாமை | | |
| **(அ)** | இலங்கை ஜனநாயகசோசலிச குடியரசின் நிதி ஒழுங்குமுறைகளின் குறியீடு | ஆரம்ப அறிக்கை ஏழு நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும் கணக்காய்வுத்தினமாகும் | நிதிவிதிமுறைகள் 104 (3) இன்படி, சேதங்கள்குறித்த பூர்வாங்கஅறிக்கை 7 | அமைச்சர் மற்றும் அமைச்சின் சேவை அதிகாரிகளுக்குசம் பந்தப்பட்ட இந்த இரண்டு வாகணவிபத்துக்கள்தொடர்பாக ஓட்டுனர்களிடமிருந்துஅறிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | ------------------------ நிதிஒழுங்குமுறை 104 (3) | பொழுது மூன்று வாகனங்கள் விபத்துக்குள்ளாகியும் தொடராக 353 நாட்கள்மற்றும் 120 நாட்கள்கடந்தும் ஆரம்ப அறிக்கைசமர்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும் | நாட்களுக்குள்சமர்ப்பிக்கப்படவேண்டும். | களைப்பெறமுடியவில்லை. ஒரு தலைப்பட்ச விசாரணைகளை நடாத்தி விரைவில அ்றிக்கை சமர்ப்பிக்கப்படும். |
| **(ஆ)** | **நிதி ஒழுங்கு முறை** 104 (3) | மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கையொண்டு சமர்ப்பிக்கப்படவேண்டியிருந்தும், கணக்காய்வு செய்யப்பட்ட திகதியாகின்ற போதும் விபத்தேற்பட்டு, 5 மாதங்கள்முதல் 50 மாதங்கள் வரை ஆறுவாகனங்கள் குறித்து எந்த அறிக்கையும் வெளியிடப்படவில்லை.. | நிதிவிதிமுறைகள் 104 (4) இன்படி, முழுமையானஅறிக்கையொன்றமூன்றுமாதங்களுக்குள்சமர்ப்பிக்கவேண்டும். | குறித்தவிசாரணைகளைமுடித்துமிகவிரைவாகஅறிக்கைகளை சமர்ப்பிப்பேன் |
| (எ) | தம்புள்ளை முகாமையாளர் பொறுப்புப்பத்திரத்தின்பிரிவு 7 இன்துணைப்பிரிவின் (அ) பத்தி (1) | நிதியத்தின் மேலதிகசேமிப்புகள் அனைத்தும் அந்தந்த முதலீடுகளில் திறைசேரி செயலாளரின் ஒப்புதலுடன் முதலீடு செய்யப்பட வேண்டும்அல்லதுஅரசவருமானவழியாகியகருவூலபற்றுச்சீட்டுக்கள் அல்லது பாதுகாப்புப்பத்திரங்களில் மட்டுமே முதலீடு செய்யப்பட வேண்டும் என்று கூறியிருந்தாலும், அதற்கு இணங்காது அனுமதியின்றி முகாமைத்துவ பொறுப்புக்கள் | தற்போதுள்ளசட்டதிட்டங்கள்குறித்துஅதிகாரிகளின்கவனம்மேலெழவேண்டியிருந்தது.. | முகாமைத்துவபொறுப்பதிகாரி மூலம்சேமிப்புபணத்தைஅதிகவட்டிவிகிதத்தைவழங்கும்அரசவங்கிகளில்முதலீடுசெய்யஅறிவுறுத்தப்பட்டுள்ளது |

மூலம் 71,572,186 ரூபா மேலதிகப்பணம் நிலையானவைப்புக்களில் இடப்பட்டிருந்தது.

## 2. நிதி மதிப்பாய்வு

----------------------

## 2.1 செலவு முகாமை

--------------------------

**பின்வரும்அவதானிப்புகள்செய்யப்படுகின்றன**

| | கணக்காய்வுகண்காணிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| | ------------------------------ | ----------------- | ------------------------------- |
| (அ) | 2018 முதல் 2020 வரை பதினைந்தாயிரம் மாடுகள் இறக்குமதி செய்யப்பட்டன செலுத்த வேண்டிய மொத்த தொகை அ.டொலர் 55,465,541<br>மொத்தத் தொகையில் (இருபது சதவீதம் அ.டொலர் 11,093,108) அதாவது ரூ.1,749,672.697 ஒப்பந்தக்காரருக்கு முற்பணம் 2008 ஆம் ஆண்டில் வெளி வளத் துறை திணைக்களத்தின் முன்கூட்டியே ஒரு வெளிநாட்டு வங்கி மூலம் வெளிநாட்டு வங்கி மூலம் செலுத்தப்பட்டது.<br>இருப்பினும், அமைச்சின் செலவுத் தலைவரின் கீழ் 2008 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடுகள் எதுவும் செய்யப்படவில்லை | நிதி விதிமுறைகள் 94 (1) இன் படி, ஒதுக்கீடுகள் இருந்தால், ஒரு சேவை,வேலை அல்லது விநியோகம் ஒன்றுக்காக கட்டுப்பணமாகவோ செலவுக்காகவோ வேறாக பெறக் கூடாது. | 20 ஆயிரம் கறவை மாடுகளை இறக்குமதி செய்யும் வேலைத் திட்டமானது அதன் முதற்கட்டத்தை ஆரம்பிக்க இருந்த அதே வேலை,திட்டத்தின் மதல் கட்டத்தின் கீழ் 2017 ஆம் வருடத்தில் இறக்குமதி செய்த கறவைகள் 5000 ம் சம்பந்தமாக 2018 மார்ச் 22ஆம் திகதி முன்வைக்கப்பட்ட விசேட கூட்டத்தின் அறிக்கையின்படி இரண்டாம் கட்டத்தை ஆரம்பிப்பது பொருத்தமானது என முன்மொழியப்பட்டு,இந்த பரிந்துரைகள் கௌரவ நிதி அமைச்சரின்உடன்பாட்டுடனும் திறைசேரி ஊடாக வேலைத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தை செயற்படுத்துவதற்கான 11,093,108 ரூபா முன்கூட்டிய பண |

| | | | |
|---|---|---|---|
| | | | ஒப்பந்தத்தின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளது. பிரதி திறைசேரி செயலாளரின் அறிவுரைக்கமைய 2019 ம் ஆண்டிற்கான ஒதுக்கீடுகள் வழங்கப்படவுள்ளன. |
| (ஆ) | மீண்டெழும் செலவீனங்கள் 24 தொடர்பில் ஒதுக்கப்பட்ட மில்லியன் ரூ.1,094.34ல் ரூ 680.59 மில்லியன் செலவு செய்யப்பட்டடு. மீதி மில்லியன் ரூ.412.75 அதாவது 6வீதம் தொடக்கம் 86 வீதம் வரை காணப்பட்டது. மீண்டெழும் 2 விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ.0.72 மில்லியன் முழுமையாக பயன்படுத்டப்படாமல் உள்ளது. | நிதிவிதிமுறை50அடிப்படையில்சரியானசெலவுமதிப்பீடுகளைத்தயாரிக்கவேண்டும். | 2018 ஆம்ஆண்டின்நடுப்பகுதியில்கிராமியபொருளாதாரஅமைச்சுமீன்வளமற்றும்நீர்வளமேம்பாட்டுஅமைச்சகத்தில்சேர்ந்ததால், கௌரவ; அமைச்சர்அவர்களின்காரியாலஅதிகாரிகள்இப்பிரிவிலிருந்துவிலகியதன்காரணமாகஅதற்கொத்தானதொடர்செலவுகள்மீதமாகஉள்ளன |
| (இ) | மொத்த மூலதன செலவில் 16 பகுதிகளுக்கு ஒதுக்கிய ரூ.2,989.62 மில்லியன். ஒதுக்கீட்டில் ரூ 2,434.27 மில்லியன்,செலவிட்டு 6% முதல் 94% வரையான இடைப்பகுதியில் 554.34 பில்லியன் ரூபா நிழுவையும் மேலும் மூலதனச் செலவுகள் 6 ற்கு ஒதுக்கிய ரூ. 6.5 மில்லியனில் முழுமையாக ஏற்பாடும் பயன்படுத்தியிருக்கவில்லை | -அது- | கௌரவ அமைச்சர் இந்த ஆண்டின் நடுப்பகுதியில் இத் துறையை விட்டு வெளியேறியதால், இந்த நோக்கத்திற்கான மூலதன ஒதுக்கீடுகள் மீதியாகியதால் இயந்திரங்கள் மற்றும் வாகனங்களின் (பெரிய) பழுது மற்றும் ஊழியர்களின் பயிற்சிக்கு அதிகாரிகள் கிடைக்காததால் அவற்றுக்கான ஒதுக்கீடுகள் மீதமடைவதற்கு காரணமாகியது. |

**2.2** பொறுப்புக்கள் **மற்றும் ஒப்புதல்களுக்கு வருதல்**

**----------------------------------**

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வுகண்காணிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| -------------------------- | ------------ | --------------------------------------------- -------------------------- |
| 2018 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டு மீதியானது ரூ. 276,548 ஐ தாண்டி தனியார் மற்றும் அரச நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய ரூ. 1,283,259 க்கான கடன்களுக்கு உடன்பட்டுள்ளதால் ஒதுக்கீடுளை தாண்டிய ரூ. 1,006,711 ற்கான ஒப்பந்தங்ளை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர் | நிதி ஒழுங்குமுறைகளின் 94 (1) இன் விதிமுறைகளுக்கு அப்பாற்பட்ட கடன்கள் பெறுவதை தடுக்க தேவையான சட்டத் திட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டும் | 1301,1402,1403,1409 போன்ற இலக்கமுடைய கடன்களுக்கு போதுமான ஒதுக்கீடு2018 வரைவு மதிப்பீட்டில்சேர்க்கப்பட்டிருந்தாலும் , ஒப்புதல் நிறைவேற்றப்படும் பொழுதுஒதுக்கீடு குறைவாககிடைத்தமையால்இந்த நிலுவை ஏற்பட்டுள்ளது |

**3.** செயல்பாட்டு விமர்சனம்

**-------------------------**

**3.1**திட்டமிடல்

**-----------------**

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வுகண்காணிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| (அ). செயல் திட்டத்தில் ஒவ்வொரு திட்டத்திற்கும் இலக்குடன் கூடிய காலக்கெடு1, ஜனவரி 2018 முதல் டிசம்பர் 31, 2018 வரை உள்ளது, மேலும் ஒவ்வொரு செயல்பாட்டையும் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்ட குறிப்பிட்ட காலக்கெடு எதுவும் காணப்படவில்லை. | 2014 பிப்ரவரி 17 திகதியிட்ட பொது நிதி சுற்றறிக்கை எண் 01/2014 இன் படி செயல் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | சரியான நேரத்தில் ஒதுக்கீடுகளைப் பெறுவதில்உள்ள சிக்கல்கள்காரணமாக, ஒவ்வொரு திட்டத்தின் கீழும்உள்ள நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுசெயல்படுத்த வேண்டும்.எனவே, ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் குறிப்பிட்ட காலக்கெடுக்கள் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.. |
| **(ஆ)** செயல்பாட்டுத்திட்டத்தினுள் ஒவ்வொரு வேலைத்திட்டத்தின் கீழ் செயற்பாடுகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதி உட்படுத்தப்பட்டிருந்தும் முன்னேற்றஅறிக்கைகளில் வேலைத்திட்டத்திற்கான முழுச் செலவு மாத்திரம் காட்டப்பட்டிருந்த்து. திட்டம் ஏற்படும் ஒரே இருந்தது.எனவே, ஒவ்வொரு செயல்பாட்டின் நிதி | ஒவ்வொரு திட்டத்தின் கீழான செயற்பாடுகளுக்கான நிதி முன்னேற்றத்தைஅளவி டக்கூடிய வகையில் மற்றும் ஒப்பிடக்கூடிய வகையில் முன்னேற்ற அறிக்கை மற்றும்செயல்பாட்டுதிட் டம்சமர்ப்பிக்கவேண்டும். | செயற்பாடுகளின் நிதி முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | |
|---|---|---|
| முன்னேற்றத்தையும் அளவிட முடியாதுஎன்பதைக்காண முடிந்தது | | |
| **(இ)** கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூ .400மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, ஆனால்அதன்கீழ்செயல்படுத்தப் படும்எனஎதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகள், இலக்குகள் மற்றும் நடவடிக்கைகள்செயல் திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.எனவே முன்னேற்ற அறிக்கையில் உள்ள தகவல் உண்மையான வெளியீடுஎன்று உறுதிப்படுத்த முடியவில்லை | - *அது* - | கிராமப்புற உள்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் வெளியீடுகளின் பற்றிய முடிவுகளுக்கு வருவது கடினமாக உள்ளது. எனவே, அத்தகைய திட்டங்களை செயல்படுத்திய பின்னர், திட்டத்தின் உண்மையான வெளியீடு முன்னேற்ற அறிக்கையில் கூறப்பட்டிருந்தாலும், செயல் திட்டத்தில் எதிர்பார்த்த செயற்பாடுகள், இலக்கை அடைதல் மற்றும் அளவீட்டு அலகுகளை முனவைப்பதில் சிக்கல்கள்இருந்தன |

**3.2** பெறுப்புக்களை செய்யத் தவறுதல்

-------------------------------

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வுகண்காணிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டிற்கானதம்புள்ளை பொருளாதார மையம்தயாரித்த செயல் திட்டத்தின் படி, ரூ. 39.5மில்லியன்மதிப்புள்ள, 05திட்டங்கள் அனுமதிக்கப்பட்டிருந்தாலும், வருடஇறுதியில் ஒறு திட்டத்தையாவது ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைளை எடுத்திருக்கவில்லை. | குறித்த கால எல்லைக்குள் செயல்படுத்த முடியுமான திட்டங்கள் திட்டமிடப்பட்டுஒழுங் கபடுத்தப்பட வேண்டும் | இது வரக்கும் வாகன தரிப்பிடம் மற்றும் அகற்றல் தொட்டி நெரிப்படுத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளன.பாதுகாப்பு கேமராக்கள் நிறுவுதல், புதிய கழிவறை கட்டும்மானம், சந்திப்பு அறையின் படிக்கட்டுக்களைஇடல் போன்ற பணிகள் இந்த ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட உள்ளது. |

**3.3** பிரதான செயற்பாடுகளுக்கு முரணான செயற்பாடுகள்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன

| கணக்காய்வுகண்காணிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| கொழும்பு, அம்பாறை மற்றும் கண்டி மாவட்டங்களில் அமையப்பெற்றுள்ள 08 பொருளாதார மையங்கள் கன்கானிப்புக்குட்பட்ட வேலையில், ஒரு தகுந்த ஆய்வின் அடிப்படையில் பொருத்தமானஇடத்தை தெரிவு செய்யாமல், கனிப்பீடுகளின் அடிப்டையில் வின்னப்பதாரிளை தெரிவு செய்யாமலும் செயற்பட்டிருந்தது. அடிப்படை மேற்கொள்ளப்படுகிறதுஒன்று இருக்க தேர்வுசெய்ய முடிவு எடுத்ததாக அதன்விளைவாக6 மையங்கள் இலக்கு தவறி செயற்படுவதாகவும் மேலும் பல மையங்களில் கடைகள் மூடப்பட்டுள்ளதாகவும் அறியவந்துள்ளது. | சிறப்பு பொருளாதார மையங்கள் ஆரம்பிப்பதற்குஇலக்கான விவசாயிகளின் விவசாய பொருட்ளை நேரடியாக போட்டிச் சந்தையில் விற்பதற்கும் வாடிக்கையாளர்களுக்கு நியாயமான விலையை பெற்றுக்கொடுப்பதற்கும் தேவையான கொள்கை முடிவுகளுடன் பொருளாதார மையமொன்றை உயிர்ப்புடன் நடாத்திச் செல்வதற்கு தேவையான திட்டங்களைதயார்படுத்த வேண்டும். | அமைச்சு மற்றும் முகாமைத்துவ பொறுப்புக்களுடன் இணைந்து உயிரோட்டமான பொருளாதார மையங்களை நடாத்திச் செல்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

**3.4** முறைசாரா கொடுக்கள் வாங்கள்கள்

-----------------------

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன

| கணக்காய்வுகண்காணிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| அம்பரை விசேட பொருளாதார மையத்தின் **15** கடைகளுக்கு ஆகஸ்ட் மாதம் முதல் 3 தொடக்கம் **8** மாதங்கள் வரை கடைக்கூலி ரூ .**245,000** நிலுவையாக உள்ளது.. | கடைக்கூலிகளை உரியதினத்தில் பெறுவதற்கான ஒப்பந்தங்கள், வழிமுறைகள் மற்றும் வழி நடாத்தும் முறைகளை ஒழுங்குபடுத்தி தொடர்ந்தும் அவை இடம்பெறுகின்றதா என்பது அவதானிக்கப்படவேண்டும் | கையகப்படுத்தப்பட வேண்டிய வணிக வளாகங்களும் கையகப்படுத்தப்பட்டுள்ளன.தற்போதுள்ள காலியாக இருக்கும் வணிக வளாகங்களுக்கு விண்ணப்பங்களை கோறி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது |

**3.5** எதிர்பார்க்கப்பட்ட ஆதாயங்களை **(Outcome)** பெறப்படாமை

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன

| | கணக்காய்வுகண்காணிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| (அ) | தம்புள்ளை விசேட கூட்டுறவு மொத்த விற்னைக் கழகத்தினூடாக 42,75 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட14, 536 சதுர அடிகளை கொண்ட இரு மாடி | 1997செப்டம்பர்30, திகதியிட்ட எண் 353,2009, நவம்பர்13 ம் திகதியுடைய எண்438 மற்றும்2003ஜனவரி03, திகதியுடைய எண்353 (5) இன் பொது நிதிச் | கட்டிடத்தை கையகப்படுத்த முறையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடத் தொடரை 06 ஆண்டுகளாக பெற்றுக் கொள்ளாமலும் வழங்காமலும் செயலற்று இருந்தமை சோனைகளின் போது தெரிய வந்துள்ளது. | சுற்றறிக்கைமற்றும் நிதி கட்டுப்பாடு771 ற்கமையநடவடிக்கை இருக்க வேண்டும். | |
| (ஆ) | 2004முதல் பசும் பால் நுகர்வைஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் 1,250பால் கடைகளைநிறுவ திட்டமிடப்பட்டது. 2013 ம் ஆண்டாகும் போது685 விற்பனைமையங்கள் கால்நடை அபிவிருத்தி சபைமற்றும்அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டது.தகுந்த ஆய்வுகள் ஏதும் இன்றி ஆரம்பித்ததன் காரணமாக 2018டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும் போது 147 நிலையங்கள்மாத்திரம் தொடர்ந்தன. | பால் உற்பத்தியைஅதிகரிக்க பாரிய முயற்சிளை மேற்கொண்டாலும் பசும் பால் நுகர்வைஅதிகரிப்பதற்கு தேவையான இந்த விற்பனை மையங்கள் மூடப்படுதை குறைக்கஅமைச்சின்நேரடி மேற்பார்வைதேவைப்படுகிறது . | பசும் பால் நுகர்வைஅதிகரிப்பதற்கென ஆரம்பிக்கப்பட்ட விற்பனை மையங்களில் அரம்பத்தில் திரவப் பாலை மாத்திரமும் பால் விற்பனை மூலம் மாத்திரமும் நடாத்துவது கடினமானது..இதரமளிகைப் பொருட்களையும் விற்பதற்கான அனுமதியை வழங்கி விற்பனை மையங்களை தொடர்ந்தும் நடாத்திச் செல்வதற்கான சூழல் தயார்படுத்தப்பட்டுள்ளது. |

**3.6** திட்டங்களைநிறைவு படுத்தாமல் கைவிடுதல்
--------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வுகண்காணிப்பு<br>------------------------ | பரிந்துரை<br>------------------ | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு<br>--------------------------------<br>------------------------------ |
| --- | --- | --- |
| சந்தை விலை உறுதிப்படுத்தலை ஏற்படுத்துவதற்கும் பின்னர் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகளை குறைப்பதற்கும் தனியார் துறையினரால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற 5 குளிர் அறைகளை நிறுவுவதற்காக 2016 ம் ஆண்டில் இல்2000 மில்லியன் ரூபாவும் 2017ஆண்டில்500 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டிருந்தன. 2016 ம் ஆண்டில்எவ்வித பணமும் செலவிடப்படாது 2017 ம் ஆண்டில் இல் 53.4 மில்லியன் ரூபா செலவழித்து ஆரம்ப கட்ட வேலைகளை செய்தும் முறையான செயலாக்க ஆய்வுகள் செய்யப்படாமை மற்றும் செயற்திட்டத்தை செயற்டுத்துவதற்கு போதுமான இட வசதிகள் இன்மையால் 2019 ஏப்ரல் மாதம் வரைக்கும் அந்த வேலை திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கவில்லை. | விலை உயர்ந்த மிகவும் யதார்த்தமான,செயற்திட்டங்கள் மற்றும் சரியான தகவல்களினூடாக துல்லியமான ஆய்வுகளின் அடிப்படையில் அறிக்களை தயாரித்த பின்னும் பின்னூட்டல்களின் அடிப்படையில் மானியங்களினால் உச்ச பயனை பெறுவதற்கான கட்டுப்பாடுகள் மற்றும் விதிகள் இடப்பட வேண்டும். | நான் உடன்படுகிறேன் |

**3.7** வெளிநாட்டு உதவித் திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வுகண்காணிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| 2016 பிப்ரவரி 24 திகதியில் இருந்து மூன்று, ஆண்டுகளாக இலங்கையில் பால் உற்பத்தியில் சிறந்த பயிற்சிக்கான கூட்டு ஒப்பந்தத்திற்காககிராமிய பிரதேச மைச்சின் செயராளர் மற்றும் நியுசீலாந்து உயர் ஆனையாளர் ஊடாக நியுசீலாந்து டொலர் 2.5 மில்லியன் நிதியமொன்றை ஏற்படுத்துவதற்கு ஒப்பமிடப்பட்டது. அந்த வெளிநாட்டு உதவி பரிவர்த்தனைகள் வெளி வள பணிப்பாளர் நாயகத்துடன் கையாளப்படவில்லை . | பொது கணக்கு சுற்றறிக்கையின்பத்தி 30/94 இன் பத்தி 2 க்கு இணங்க, அந்நியசெலாவணிபரிவர்த் தனை கணக்குகளை அமைப்பதற்கு தேவையான அமைப்புகள் மற்றும் கட்டுப்பாடுகள்வெளிநாட்டு வளங்களின் பணிப்பாளர் நாயகத்தின்அறிவுறுத்தலி ன் பேரில் தயாரிக்கப்படும். | பொருத்தமற்றது |

**3.8** சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வுகண்காணிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| அமைச்சின் பதிப்புரிமை உடைய வாகணமொன்றும் பதிப்புரிமையற்ற வாகனங்கள் 5 இனதும் பெறுமதி 16.3 மில்லியன் ரூபாவாக உடைய 06 வாகணங்கள் 2015,2016 மற்றும் 2018 ம் | 2009நவம்பர்13திகதியிட்ட இலக்கம் 438 உடைய மற்றும் உட்பட, 2003ஜனவரி03, இலக்கம்353 (5) சுற்றறிக்கைக்கு ஏற்ப | அமைச்சின் கீழ் இருக்கும்ஆறுவாகனங்க ள் செயலற்று இருப்பதோடு ஒவ்வொரு வாகணங்கன் |

| | | |
|---|---|---|
| ஆண்டுகளில் இயங்குவதை விட்டும் தூரமாக்கப்படிருந்த்து. | பொது நிதி மற்றும் நிதி நெறிமுறைகளின்771இன் படி செயலற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தும் சொத்துக்கள் சம்பந்தமாக தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். | சம்பந்தமாகவும்பல்வேறு காரணங்களினால் மேலதிக நடவடிக்க்கள் தாமதமாகியுள்ளன. |

**3.9** நட்டங்கள் மற்றும் சேதங்கள்

-------------------- -------------

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

| | கணக்காய்வுகண்காணிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| | ---------------------------- | ---------------- | -------------------------------- ---------------------------- |
| (அ) | பிரதி அமைச்சர் பயண்படுத்திய இலக்கம் KA - 6702 உடைய வாகனம் 2012 நவம்பர் 06 அன்று ஓட்டுநரின் கவனமற்ற இயக்கத்தினால் ஏற்பட்ட விபத்தின் பின் பழுது பார்ப்பதற்கு ரூ .736,625 செலவானது. இலப்பீடாக ரூ.608,420 கிடைக்கப்பெற்றிருந்தது. அதன்படி, 128,205 ரூபா இழப்பின் ஒரு பகுதியாக மீட்க 2018இல் முடிவெடுக்கப்பட்டிருந்தும், மீட்டெடுக்கப்பட வேண்டிய விகிதம் எவ்வளவெனமுடிவு செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும், முடிவுகளை சதவீதம். 2014ஆம் ஆண்டில், சாரதி சேவையை விட்டு வெளியேறியபோது ரூ.4,000 மட்டுமே வசூலிக்கப்பட்டிருந்த்து, ஆனால் மீதியை மீட்பதற்கான நடவடிக்கைகளை | நிதி ஒழுங்குவிதிகள்104 இன் படிவிபத்து அறிக்கை தயாரித்து விபத்தினால் ஏற்பட்ட இழப்பிற்குபொறுப்புக் கூற வேண்டியவர்களிடமிருந்து மீட்டெடுப்பதற்கானநடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | ஒ.ரெ. 104 இன்படி மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கு இணங்க, ஓட்டுநரிடமிருந்து ஏற்பட்ட இழப்பை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 4,000.00 ரூபாமட்டுமே செலுத்தியுள்ளார். 2014.12.01 ஆம் திகதியிலிருந்து சாரதியின் சேவை முடியப்பெற்றுள்ளதால் நஷ்டஈடு மீட்கப்பட்டில்லை. மீதிப்பணத்தை சாரதியின் பொது சேவை |

| | | | |
|---|---|---|---|
| | எடுத்திருக்கவில்லை. | | சேமலாப நிதியத்தில் இருந்து மீட்க முடிவு செய்யப்பட்டாலும், சாரதி மாதிரிப்பத்திரத்தை இன்னும் சமர்ப்பிக்கவில்லை இதற்கானசட்ட நடவடிக்கைகுறித்துகவனம் செலுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ | 2014 ம் ஆண்டு விபத்துக்குள்ளான KA - 6702 உடைய வாகனம் பழுது பார்ப்பதற்கு செலவாகும் 2,123,468 ரூபா வில் கிடைக்கப்பெற்ற .200,443 ரூபா தள்ளுபடி செய்யாமல் முழுப்பெறுமானத்துக்கு நிதிநிலை அறிக்கைகளில் புத்தகங்களால் குறைக்கப்பட்ட பெறுமானம் நட்ட அறிக்கையில் காட்டப்பட்டிருந்த்து. | நிதி அறிக்கைகளில்சரியானஇழப்பு மதிப்புஇருக்க வேண்டும் . | எண்6702 KA- வாகனம்விபத்துக்குள்ளாகியுள்ளது. பழுது பார்ப்பதற்கான செலவு ரூ.2.123.468. ஆகும்.ரூ.200,443.50 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.இதை சரிசெய்ய நான் பணியாற்றுவேன். |

## 3.10 பசுக்கள் இறக்குமதி திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

### 3.10.1 முறையான அறிவின்றி திட்டத்தை செயல்படுத்தல்

| | கணக்காய்வுகண்காணிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| (அ) | திட்டத்தை ஆரம்பிக்கின்ற போது பால் உட்பத்தியை அதிகரிப்பதற்கு 2006 ம் ஆண்டு தயாரித்துள்ள தேசிய கொள்கை மற்றும் 2007 ஜூன் 20 அன்று அமைச்சரவை பத்திரத்திற்கு இணங்க உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான உடனடி வேலைத் திட்டங்கள் நான்கில் கால் நடைகளைக் கொள்வனவு செய்வதை மாத்திரம் கவனம் செலுத்தப்பட்டிருந்த்து. அந்த கொள்வனவின் போது வெப்ப மண்டல கால நிலைக்கு ஏற்பவும் நட்டில் காணப்படுகின்ற வளங்களால் கால்நடைளை வளர்ப்பதற்கும் நோய்களிலிருந்து பாதுகாப்பதற்குமான மற்றும் பராமரிப்பு செலவு குறைவுள்ள பசுக்களை இறக்குமதி செய்வதற்கான கொளகைத் திட்மொன்றை வகுத்திருக்கவில்லை. | நாட்டில் காணப்படுகின்ற காலநிலைக்கு ஈடுகொடுக்கக்கூடிய சூழலு க்குப் பொருத்தமான, நாட்டிலுள்ள சாதாரன உணவுளைக்கொண்டி வளர்த்தெடுக்க்க்கூடிய பசுக்ளை இனங்கணடு அரச கொடுப்பனவுகளால் கூடிய பலனைத் தரக்கூடிய உயிரினங்ளை இறக்குமதி செய்வதற்கு பொருத்தமான கொள்கைகளை தயாரிப்பதற்கு கவனம் செலுத்த வேண்டும். | தகவல் துல்லியமாக இல்லை . அத்தகைய நாடுகளில் இருந்து மாடுகளை இறக்குமதி செய்வது மிகவும் கடினம், மேலும் நோய்க்கான ஆபத்துகளும் அதிகம் |
| (ஆ) | 2012 முதல் பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தாலும், அந்த பசுக்கள் தொடர்பாக எதிர்கால பணிகளுக்கான தரவுகளை அமைச்சகம் தயாரித்து கண்காணிக்கவில்லை. | தரவறிக்கை ஒன்றை தயாரித்து ஒழுங்காக மேற்பார்வை செய்யவேண்டும் | திட்டத்தில் விலங்குகளுக்கு ஒரு தரவறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2017 இல் 20,000 பால் மாடுகள் இறக்குமதி செய்ய 2015 இல் மேற் கொண்ட சாத்தியப்பாட்டு அறிக்கையின் படி உணவுக்கான செலவு பால் வருமானத்தில் 57.38 சத விகிதமாக கணக்கிடப்பட்டிருந்தது. எனினும் கால்டை வாரியங்களில் உணவுக்கான செலவு பால் வருமானத்தில் 69 சத வீதத்திலிருந்து 89.71 சதவீத வித்தியாசத்தை கொண்டிருந்தது. | குறிப்பாக செலவு மிக்க திட்டப்பணிகளுக்கு துல்லியமான மற்றும் சரியான தகவல்கள் ஊடாக நிபுனத்துவமடைய அறிவார்ந்த செயலாக்கஆய்வு அறிக்கை தயாரித்து அரசாங்கத்தின் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களினால் உச்ச பயனை பெற வேண்டும். | துல்லியமாக இல்லை |
| (ஈ) | மேற் குறிப்பிட்ட சாத்தியப்பாட்டு அறிக்கையின் படி முதல் வருடத்தில் ஒரு பால் சுரப்பியால் பெற முடியுமான நாளாந்த அளவு 18 லிட்டர் மற்றும் இரண்டாவது ஆண்டு நாளொன்றுக்கு 19.5 லிட்டர் இருக்க வெண்டும்என்று குறிப்பிடப் பட்டிருந்த்து. எனினும், கால்நடை வாரியம் முதல் இறக்குமதி செய்த விலங்குகளில், முதல் வருடத்தில் அதிகபட்சமாக 15லிட்டர் பாலும் இரண்டாம் வருடத்தில் நாளொன்றுக்கு லிட்டர் 16 பெறப்பட்டிருந்த்து. | - அதே - | இத்திட்டம் சம்பந்தமாக ஒரு தகுந்த ஆய்வறிக்கை 2017 ஆண்டில் சமர்ப்பிக்கப்படாது,அது சம்பந்தமாகமுன்வைக்கப் பட்டுள்ள தகவல்கள் தெளிவின்மையால்குறிப் பான பதில் வழங்குவதற்கு முடியும் |
| (உ) | சாத்தியப்பாட்டு அறிக்கையின் படி, ஒவ்வொரு ஆண்டும் ஒரு பால் மாட்டின் கருத்தரித்தல் வீதம் 80 சதவீதம் ஆகும் . எனினும், இதுவரைக்கும்செயற்கை கருவூட்டல் மூலம்இலங்கையினுள்25 சதவீத்திற்கும் | - அதே - | தகவல் துல்லியமாக இல்லை . |

| | | |
|---|---|---|
| 30 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவுள்ளது. | | |
| (ஊ) 2007 இல் அமைச்சின் கால் நடை அபிவிருத்தி சபை டெண்டர் மூலம் கறவை மாடுகள் இறக்குமதி செய்ய தேர்ந்தெடுத்த ஒப்பந்தக்காரருக்கே மீண்டும்டெண்டர் வழங்காமல் 73.95 மில்லியன் ரூபாவிற்கு 20,000 பசுக்கள் இறக்குமதிக்கு அமைச்சினூடாக, 2014 ஒக்டாபர் 14 ம் திகதிஒப்பந்தத்திற்கு வந்தனர்.அந்த ஒப்பந்தம்நவம்பர் 2016 இல் திருத்தப்பட்டு இரண்டு கட்டங்களில் செயற்படுத்துவதற்கு மீண்டும் ஒப்பந்தத்திற்கு வந்து முதலாவது கொள்முதல்முடிந்து 10 வருடங்களின் பின் 2017 முதல் 2020 வரை 20,000 பசுக்கள்இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது | கொள்முதல் வழிகாட்டுதல்கள்குறியீட்டு விதிகட்டளைகளின்அடிப்படையில் டென்டர்அழைப்பு மூலம் அதிக இலாபத்தை தருகின்ற ஒப்பந்ததாரர்கள் தேர்வுசெய்யப்படவேண்டும் | இத்திட்டத்தை அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சகம் வடிவமைத்து, சம்பந்தப்பட்ட கால்நடை மற்றும் ஊரக சமூக மேம்பாட்டு அமைச்சகம் முறையான கொள்முதல் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு செயல்முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனர்களுக்கு டெண்டரை வழங்கிதோடு அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டுள்ளது |

**3.10.2** திட்டம் வெற்றியளிக்காமை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட அடைவுகளை அடைய முடியவில்லை
-----------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன

| கணக்காய்வு கண்காணிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் பால் மாடுகள் இறக்குமதி திட்டத்தின் கீழ் முதலாவது கட்டத்தில் பால் மாடுகள் 1994 மற்றும் இரண்டாம் கட்டத்தில் 3204 இறக்குமதி செய்வது சம்பந்தமாக பின்வரும் | கால்நடைத் துறையில் நிபுணத்துவத்தைப் பயன்படுத்துவதன் மூலம் | தகவல்கள் உண்மையல்ல. |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிப்புகள் மேற் கொள்ளப் படுகின்றன. | | |
| (அ) | இரண்டாவது கட்ட இறக்குமதி செய்யப்பட்ட 3,024 விலங்குகளில் மாதிரி அடிப்படையில் தேர்ந்தெடுத்த 858 விலங்குளை வளர்க்கும் பால் விவசாயிகள் 12 பேரிடம் பெற்றுக் கொண்ட அறிக்கைகளுக் கேற்ப அவர்கள் மாதாந்தம் ரூபா 25,240 தொடக்கம் ரூபா 5.2 மில்லியன் இடைவெளி வரை நட்டம் அடைந்திருந்தனர் | சாத்தியக்கூற்று அறிக்கைகள் தயாரிக்கப்பட்ட பின்னர்நாட்டிற்குநன் மை பயக்கும்வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும். | |
| (ஆ) | முதன் முறை இறக்குமதி செய்த பால் மாடுகள் 1994 இல் தேர்ந் தெடுக்கப்பட்டு 902 விலங்குகள் மாதிரியில் 2019 பெப்ரவரி 28 தேதிக்கு தாய் பசுக்கள் 656 மட்டும் உயிருடன் வாழ்ந்து வருகின்ற அதே வேளை, அந்த விலங்குகளில் கன்றுகள் ஈன்று பண்ணையில் உயிருடன் உள்ள விலங்குகள் 190 மட்டுமே ஆகும். | கால்நடைத் துறையில் நிபுணத்துவம் வாய்ந்த ஒரு குழுவால் முறையான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் கால்நடை மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் அல்லது அமைச்சின் கீழ் நீண்ட கால திட்டங்கள் தயாரிக்கப்படவேண் டும். | தகவல் துல்லியமாக இல்லை. |
| (இ) | இரண்டாவது முறை இறக்குமதி செய்யப்ட்ட பால் மாடுகள் 3024 இல் 858 முதல் முறையாக கன்றுகள் 803 ஈன்றெடுத்துள்ளதுடன் அதில் 424 ஆண் கன்றுகள் எனின் 53 சத வீதமாகும். மேலும், 361 குட்டிகள் அதாவது 45 | | |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதம் இறந்திருந்தன. 2019 பிப்ரவரி , மாதம் மிகுதியாகவிருந்த இறக்குமதி தாய்ப் பசுக்கள் 533 ஆகும் என்பதுடன் அவ் விலங்குகளில் கருக்கட்டி இருந்த பால் மாடுகளின் எண்ணிக்கை 210 ஆகும் அதாவது 39 வீதம் என்பதுடன் கன்றுகளின் எண்ணிக்கை 116 மட்டுமேயாகும் என அவதானிக்கப் பட்டுள்ளது. | | |
| (ஈ) | கால் நடை இறக்குமதிக்கான USD 16,739,589.77 நிதியில் 868,518.52 USD மில்லியன் அதாவது ரூபா 135,011,204 தொழில் நுட்ப, முகாமை மற்றும் திறன் வளர்ச்சி தொடர்பானதாகும். மேற் குறிப்பிட்ட விடயங்களுக்கு இணங்க இந்த முகவர் நிறுவனத்தின் மூலம் தொழில் நுட்ப முகாமை சரியான முறையில் இடம் பெறவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கால்நடைத் துறையில் நிபுணத்துவம் வாய்ந்த ஒரு குழுவால் முறையான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் கால்நடை மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் அல்லது அமைச்சின் கீழ் நீண்ட கால திட்டங்கள் தயாரிக்கப்படவேண்டும் | தகவல்கள் உண்மையல்ல |
| (உ) | பால் உற்பத்திகளை அதிகரிப்பதன் மூலம் பால் மா இறக்கமதியை குறைப்பதற்கும் மற்றும் பசும் பால் நுகர்வை அதிகரிப்பதற்கும் பால் பசுக்கள் இறக்குமதி திட்டத்தின் கீழ் 2012 வருடத்திலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை ரூபா 6435 மில்லியன் வெளி நாட்டுக் கடன் பெற்றுக் கொண்டு பால் பசுக்கள் 9500 இறக்குமதி செய்து கால் நடை அபிவிருத்தி சபைக்கும் மற்றும் அமைச்சின் கீழ் தனிப்பட்ட பால் உற்ப்த்தியாளர்களுக்கும் வினியோகம் செய்யப்பட்டு இருந்நது. | பால் மாடுகள் இறக்குமதி செய்வதற்கு சமனாக பசும் பால் நுகர்வு மற்றும் பால் மா இறக்குமதயை குறைக்கப்பதற்கான ஒரு கொள்கையைத் தயார்படுத்த வேண்டும். | தகவல்கள் உண்மையல்ல |

**3.10.3** பொது மக்களுக்கும் நாட்டுக்கும் பாதகமாக பாதுகாப்பற்ற முறையில் திட்டத்தை செயல்படுத்தல்

| | கணக்காய்வுகண்காணிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| (அ) | 1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க விலங்கு நோய் சட்டத்தின் பிரிவு 28 இன் கீழ் நாட்டிற்கு வரும் ஒவ்வொரு விலங்கையும் தொற்றுநோய் பரிசோதனைக்குட்படுத்த வேண்டும்.ஆனால் தொற்றுநோய் பரிசோதனை சட்டத்தை மீறுவதாக கண்டறியப்பட்டது.இறக்குமதி செய்யப்பட்ட பாலின் பிரேத பரிசோதனையில்BVD வைரஸ் தொற்று இருப்பதுதெரியவந்தது. | சட்டத்தின் படி செயல்பட வேண்டும்.. | துல்லியமாக இல்லை |
| (ஆ) | 2017 ம்ஆண்டு இறக்குமதி செய்த பால்மாடுகள் 1,994மற்றும் 3,024பற்றி பிரதானகால்நடை அதிகாரி மற்றும் கால்நடை ஆராய்ச்சி இயக்குனர் வழங்கிய தொற்றுநோயறிக்கைக்கேற்ப உயிரிணங்களுக்குள்ள தொற்றுநோய் மனிதர்களுக்கும் தாவக்கூடிய அவதானம் உள்ளதாக கால்நடை மற்றும் சுகாதாரத் துறையின் பணிப்பாளர் | இத்துறையில் அறிவுள்ள ஒரு குழுவினரால் முறையான ஆய்வு மேற்கொள்ள ப்பட வேண்டும், மேலும் நாட்டிற்கும் பொதுமக்களுக்கும் தீங்கு விளைவிக்காத வகையில்திட்டங்கள் செயல்படுத்தப்பட | இந்த பணிகளை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறை இயக்குநர் ஜெனரல் மேற்கொண்டுள்ளார். |

| | | |
|---|---|---|
| நாயகம்தெரிவித்திருந்தார். | வேண்டும். | |

**3.10.4** திட்டத்தின் நஷ்டம் மற்றும் இழப்புகள்

----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன

| | கணக்காய்வு கண்காணிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| (அ) | திட்டத்தின் தோல்வியின் விளைவாக, 2018 ஆம் ஆண்டிற்கான இறக்குமதிக்கான 2,500 விலங்குகள் 2019 ஆகஸ்ட் வரை நிறுத்தப்பட வேண்டியிருந்தது.எனவே, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மாடுகளை இறக்குமதி செய்ய வேண்டிய பசுக்களின் எண்ணிக்கை முறையே 2,500, 7,500 மற்றும் 5,000 ஆகும்.இவற்றுக்கு 2008 ம் ஆண்டு மே மாதம் செலுத்தப்பட்டுள்ள தொகை முறையே 291.61 மில்லியன், மற்றும் ரூ.874.83 மில்லியன் மற்றும் ரூ. 583.22 மில்லியன்,மொத்தம் ரூ .1,749.67 மில்லியன் ஆகும்.மேலும் இப்பணத்துக்கான வட்டி மற்றும் அந்நிய செலாவணி தேய்மான | கால்நடை மேம்பாட்டு வாரியம் அல்லது அமைச்சகத்தின் கீழ் நீண்ட கால திட்டங்களுக்குத் தயாராவதற்கு கால்நடைத் துறையில் உள்ள வல்லுநர்கள் குழு முறையான ஆய்வை மேற்கொள்வது நல்லது. | இத் திட்டத்தை ஒரு போதும் தோல்வியாக காட்ட முடியாது, மேலும் அரசாங்க நிவாரணத்தைப் பெற இந்த திட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் வெளி நபர்கள் மேற்கொண்ட முயற்சிகள் காரணமாக இந்த திட்டம் தோல்வியுற்றதாகக் காட்டப்பட்டது. சரியான மறையில் முகாமை செய்யப்பட்ட பண்ணைகளில் எதிர்பார்க்கப்பட்ட பலன் கிடைக்கப் பெற்றதோடு ஒரே வகையான உயிரிணங்கள் வெவ்வேறு விவசாய நிலங்களில் வெற்றி தோல்விகளை முகாமை செய்வதில் பலவீனம் இருப்பது தெளிவு. அதே போன்று அரசாங்கத்தினால் 6% சலுகை வட்டி வீதத்தையும் விரும்பிய முடிவுகளை அடைய முடிந்தது. ஒவ்வொ;ரு விலங்குக்கும் ரூ .267,000 மற்றும் பிற அவசியத சேவைகளும் ஒழுங்குபடுத்தப் |

| | | |
|---|---|---|
| நட்டத்தை ஏற்க வேண்டி வரும் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். | | பட்டுள்ளதோடு இந்த அனைத்து சலுகைகளையும் பெற்றுக் கொண்டு விவசாய நிலங்களின் உண்மை நிலையை மறைத்து அரசிடமிருந்து சலுகைகளை பெற்று அரசிடமிருந்து இலாபமீட்ட துடிக்கும் விவசாயிகளும் இதற்குள்ளே உள்ளனர். |
| (ஆ) பலாட் நிறுவனத்தினால் பெற்றுக் கொடுத்த பீடிகைக்குட்பட்ட 10 உயிரிணங்களுக்கு கலேவேல பண்ணையொன்றின் பன்னையாளர் செலவழித்த தொகையாகிய மில்லியன் ரூபா வழங்கப்பட்டிருந்தாலும், அரசாங்கம் செலவழித்த 3.21 மில்லியன் ரூபாவானது  அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பாகும், அதனை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.. | அரசாங்கம் செலவழித்த, எனினும் சம்பந்தப்பட்ட தரப்பினரால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பை குறித்த தரப்பினரிடமிருந்தே திருப்பப் பெற்றுக் கொள்ள வேண்டும். | அந்த விவசாயி ஆரம்பத்தில் வின்னப்பித்த ஒரு பயனாளியாக இருக்கவில்லை, மேனிக்பலாமா பண்ணையில் உள்ள மீதமுள்ள விலங்குகள் அவர் அறிந்த நிலைமையில் பெற்றுக் கொண்டவையாகும்.அவரது கோரிக்கைக்கினங்க மீண்டும் பரிசோதித்த பின், எனது வேண்டுகோளின் படி வேலார்ட் நிறுவனம் விவசாயிக்கு அந்தப் பணத்தை செலுத்தியது, இறக்குமதியின் பின்னர் சிக்கலுக்குட்பட்ட விலங்குகளாகையால்அரசாங்கத்தால் பணம் செலுத்த முடியாது.அந்த விலங்குகளும் விவசாயிற்கு வழங்கப்பட்டுள்ளன. |

**4. எதிர்பார்த்த வெளியீட்டு அளவை அடையப் பெறாமை.**

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன

| கணக்காய்வு கண்காணிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
| --- | --- | --- |
| கிராமிய பொருளாதார அமைச்சகம் தனது அமைச்சுக்கு உரித்தான நிறுவணங்கள் மற்றும் நோக்கங்களாக வறுமை ஒழிப்பு, பசி பட்டினியை அகற்றல் மற்றும் நல்லதொரு சூழல் மூலமாக பொருளாதார வளர்ச்சியாக அறிமுகப்படுத்தியிருந்தது. ஆயினும் கால்நடை வாரியம் அதன் நோக்கங்களில் தமது உற்பத்திகளூடாக பசி மற்றும் ஊட்டச்சத்தை உயிர்ப்பித்தள் எனும் நோக்கத்தை அடையாளம் கண்டிருக்கவில்லை. | நிலையான அபிவிருத்தி இலக்கை நிறைவேற்றிக்கொள்ளும்படியான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்த வேண்டும் | பதில் வழங்கப்பட்டில்லை |

## 5. மனிதவள முகமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன

| | கணக்காய்வுகண்காணிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு |
|---|---|---|---|
| (அ) | நியமனம் ஆணையத்தின் ஒப்புதல் இல்லாமல் செயலாளர் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டு இறுதி வரை அமைச்சகத்திற்கு அறிக்கை அளிக்கவில்லை. ஜூன் 2013 முதல் மார்ச் 2014 வரை நெல் சந்தைப்படுத்தல் வாரியத்திற்கு விடுவிக்கப்பட்ட 27 மேம்பாட்டு அதிகாரிகளில், 26 பேர் வருட இறுதி வரை,அமைச்சகத்திற்கு அறிக்கை அளிக்கவில்லை மேலும், ஓய்வூதிய பங்களிப்புகளை தற்காலிகமாக விடுவிக்கும் நேரத்தில் மீட்டெடுக்க வேண்டும் என்றாலும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கழிக்கப்படும் மொத்த சம்பளம், விலக்கு இல்லாமல், ரூ. 24.30 மில்லியன் திருப்பிச் செலுத்தப்பட்டது. | ஸ்தாபனக்கோவை V இன் படி குறியீட்டின் பிரிவு 2.5.1 ற்கு ஏற்ப செயற்பட வேண்டும் | நெல் சந்தைப்படுத்தல் வாரியம் இந்த அமைச்சின் கீழ் உள்ள ஒரு நிறுவனம் என்பதால், இந்த அதிகாரிகள் அமைச்சின் ஒருங்கிணைப்பு கடமைகளுக்காக நெல் சந்தைப்படுத்தல் வாரியத்துடன் இணைக்கப்பட்டனர். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட 666 பதவிகளில், டிசம்பர் 31, 2018 நிலவரப்படி, ஒன்பது மூத்த நிலை பதவிகள் உட்பட 33 காலியிடங்கள் இருந்தன. | தங்கள் கடமைகளை முறையாகச் செய்ய அமைச்சில் போதுமான | ஊழியர் காலியிடங்கள் 9 உட்படபெரும்பாலான காலியிடங்களுக்கான அரசபொது நிர்வாக மற்றும் உள்துறை அமைச்சகத்தினூடாக ஊழியர்கள் |

| | |
|---|---|
| பணியாளர்களைத் தக்க வைத்துக் கொள்ள அனைத்து காலியிடங்களுக்கும் மிக விரைவாக பணியாளர்களை நியமிக்க வேண்டும் | பெற வேண்டிய பதவிகளாகையால் அந்த வெற்றிடங்களை நிரப்புமாறு அமைச்சகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. ஆனால் சில பதவிகளுக்கு நியமனங்கள் உள்ளன. |